# ஒரே வாய்க்கால்… ஒரே பராமரிப்பு …!

10.05.2013





ஜீவாமிர்த தயாரிப்பில்…

ஆள் அறிந்து ஆசனம் போடு, பல் அறிந்து பாக்கு போடு என்பார்கள். இந்த சொற்றொடரோடு ' பயிர் அறிந்து பாசனம் செய்' என்ற வாக்கியத்தையும் சேர்த்தக் கொண்டு, பாசனத்தில் புது முயற்சியைக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார், கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அஸ்வந்த் நாராயணன். இவர், கலப்புப் பயிர்களைப் பயிரிட்டு, ஒரே பாசனத்தில் அனைத்துப் பயிர்களுக்கும் தண்ணீர் கிடைக்குமாறு சாகுபடி செய்து வருகிறார். கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள வேப்பனபள்ளியிலிருந்து பேரிகை செல்லும் சாலையில் பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது, நேரலகிரி என்னும் கிராமம். தென்னை, மா, பாக்கு, பலா எனப் பலவித மரங்ளோடு வரவேற்கிறது அவருடைய சாமியார் தோட்டம். இங்கு இவருக்கு சொந்தமாக ஏழு ஏக்கர் நிலம் இருக்கிறது. இவர் கர்நாடகா போக்குவரத்துக் கழகத்தில் மெக்கானிக்காக இருந்துள்ளார். இவர் பகுதியில் விளையாத காய்கறிகள் எல்லாம் கர்நாடகாவில் விளைவதைப் பார்த்து இவர் தோட்டத்திலும் அதை எல்லாம் சாகுபடி செய்ய ஒரு தரம் தர்பூசணி கொண்டு வந்து நடவு செய்தார். நன்றாக வளர்ந்துள்ளது. அடுத்த தக்காளி போட்டார். அதுவும் நன்றாக வளர்ந்து முதன் முதலில் இந்த ஏரியாவில் தக்காளி சாகுபடி செய்த பெருமையை அஸ்வந்த் பெற்றுள்ளார்.

## ஒரே செலவு, பல பயிர்கள்

அடுத்தடுத்த நெல், கேழ்வரகு போட்டு விற்கும் போது சரியாக விலை கிடைக்கவில்லை. அதனால் விவசாயம் வேண்டாம் என்று மொத்தமாக 500 தென்னங் கன்றுகளை வைத்தார். தென்னங் கன்றுக்கு ஊடுபயிராக 250 அல்போன்சா, 50 பாக்கு, 15 பலா, 10 நாவல், 5 நார்த்தங்காய் என்று வைத்திருக்கிறார். கொஞ்ச நாளில் வேலையிலிருந்த ஓய்வு பெற்றுவிட்டார். அதன்பின் 10 எலுமிச்சை, 150 சப்போட்டா, 5 மாதுளை, 5 நாட்டு நெல்லி, 100 கறிவேப்பிலை என்று தோப்புக்குள் வைத்தார். இந்த மரங்களுக்கெல்லாம் தனியாக வாய்க்கால் எடுக்காமல் தண்ணீர் எடுத்துவிட்டால் ஒரே நேரத்தில் எல்லா மரங்களுக்கும் பாய்வது போல் வாய்க்கால் எடுத்து பாய்ச்சினார். அதனால் தண்ணீர் பாய்ச்சும் வேலை சுலபமானதாக கூறுகிறார்.

மூன்று வருடத்திற்கு முன்பு ஒரு ஏக்கரில் பரவலாக ‘ஏலக்கி’ ரக வாழையைப் போட்டு அதற்கிடையில் பப்பாளியைப் போட்டுள்ளார். இரண்டாவது ஈத்து வாழை இப்பொழுது குலை தள்ளி நிற்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சொட்டுநீரில் மானியம் போட்டுள்ளார். அதன் மூலமாகவே இயற்கை உரங்களையும் கொடுத்துக்கொண்டு வருகிறார். அதுபோலவே, களை எடுப்பது மண் அணைப்பது எல்லாவற்றையும் தனித்தனியாக செய்யாமல் ஒரே நேரத்தில் மொத்தமாக எல்லா பயிர்களுக்கும் செய்கிறார். அதனால் இப்போது இவருக்கு நிறைய நேரம் மிச்சமாவதோடு கூலியும் மிச்சம் என்கிறார் அஸவந்த்.

**மண்ணுக்கு ஜீவாமிர்தம், பூச்சிகளுக்கு ராமபானம்**

ஒரு நாட்டு மாடு வைத்திருக்கிறார். அதுதான் இவருடைய உரத் தொழிற்சாலை என்கிறார். இவரே மண்புழு உரம் தயாரிக்கிறார். இவர் பயனுக்குப் போக மீதி மண்புழு உரத்தை விற்றுவிடுவார். சாணம், சிறுநீர் வைத்து ஜீவாமிர்தம் தயாரித்து (200 லிட்டர் டிரம்மில் 50 லிட்டர் மாட்டுச் சிறுநீர், 50 கிலோ சாணம், 10 கிலோ கடலைமாவு, 10 கிலோ வெல்லம், ஒரு கிலோ தோட்டத்து மண் ஆகியவற்றை இட்டு 15 நாட்களுக்கு தினமும் மூன்று வேளை கலக்கி வந்தால், ஜீவாமிர்தம் தயார்) 10 நாளைக்கு ஒரு முறை மரங்களுக்கு கொடுக்கிறார். அதுபோல் மாதத்துக்கு ஒரு தரம் ராமபானம் (25 கிலோ வேப்பிலை, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, புகையிலை ஆகியவற்றில் தலா 10 கிலோ. இவற்றை மொத்தமாக கிரைண்டரில் நன்றாக அரைத்து, 200 லிட்டர் கோமியத்தில் 40 நாட்கள் ஊற வைத்து, தினமும் ஒரு முறை கலக்கி வந்தால், ராமபானம் என்னும் பூச்சிவிரட்டி தயார். இதை 1:50 என்ற விகிதத்தில் கலந்து பயன்படுத்த வேண்டும்) அடிக்கிறார். அதனால் பூச்சித் தொல்லையே இருக்காது. இந்த ராமபானத்தைத் தயாரித்த ஆறு மாதம் வரை வைத்துப் பயன்படுத்தலாம். ஆனால் என்ன அடித்தாலும், சிவப்பு எறும்பைத்தான் கட்டுப்படுத்த முடிவதில்லை என்கிறார் அஸ்வந்த் நாராயணன். தென்னையை வருடத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டுவிடுகிறார். மட்டை, ஓலை மூலமாக வருடத்திற்கு 15 ஆயிரம் ரூபாய், அல்போன்சா மூலம் ஒரு லட்ச ரூபாய், 50 ஏலக்கி வாழை மூலமாக வருடத்திற்கு 5 ஆயிரம் ரூபாய், பாக்கு, பலா, கறிவேப்பிலை, மண்புழ உரம் விற்பதன் மூலமாக 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. கிட்டத்தட்ட வருடத்திற்கு மொத்தமாக 3 லட்ச ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைக்கிறது. இதில் பாதிக்குப் பாதி செலவு என்று வைத்துக் கொண்டாலும் வருடத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய் லாபம் என்கிறார்.

**தொடர்புக்கு**

அஸ்வந்த் நாராயணன்
அலைபேசி : 090954 92523